(இ) அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக் காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறி முகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10–50)

(ஈ) வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண் டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.